**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2023 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 04-ஆம், நாள் திங்கட்கிழமை**
**CNR No.TNTI12-000003-2023**
**இடைநிலை மனு எண்.92/2023**
**இன**
**அசல் வழக்கு எண்.3/2023**

சாந்தி

... மனுதாரர்/வாதி

**.. எதிர் ..**

ஸ்ரீ.பூபதிராஜ்

...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இறுதியாக 20.11.2023 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.நந்தகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் அவரை தோன்றாத்தரப்பினராக உத்திரவிடப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரரோ, அவரது ஆட்களோ, வேலையாட்களோ, முகவர்களோ, உறவினர்களோ, எதிர்மனுதாரர் மூலம் உரிமை

கோரும் வேறு நபர்களோ மனு சொத்தினை மனுதாரர் அமைதியான முறையில் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருவதை எந்த வித இடையூறும் செய்யக்கூடாது என தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 39 விதி 1, 2-ன்படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :-</u>**

2.1.) மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மனு சொத்துக்கள் ஒரு ராமசாமிகவுண்டர் மற்றும் சாமியப்பகவுண்டருக்கு பாகப்பிரிவினை ஆவண எண்.568/1973-ன்படி" பி " அட்டவணை சொத்துக்களாக பாத்தியப்பட்டிருந்ததாகவும், மேற்கண்ட ராமசாமிகவுண்டர் கடந்த 01.08.2012-ல் இறந்துவிட்டதாகவும், ராமசாமிகவுண்டரின் வாரிசுகளாக அவரது மனைவி சுப்பாத்தாள், மகள் செல்வி, ரோகினி ஆகியோர் வாரிசுரிமைப்படி சொத்தை அடைந்து அனுபவித்து வருவதாகவும், மேற்கண்ட சுப்பாத்தாள், செல்வி, ரோகினி, ஆகியோர் கூட்டாக கிரைய ஆவணம் மனுதாரர் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளதாகவும், அந்த கிரைய ஆவண தேதியிலிருந்து மனுதாரர் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருவதாக கூறப்பட்டுள்ளது.

2.2.) மனு சொத்துக்கள் மனுதாரருக்கு முழுமையாக பாத்தியப்பட்டதாகவும்,

எதிர்மனுதாரருக்கு மனு சொத்தின் அருகில் சொத்து உள்ளதாகவும், அவர் அந்த சொத்தை செட்டில்மெண்ட் ஆவணப்படி அடைந்ததாகவும், கடந்த 28.12.2022 ம் தேதி மனு சொத்துக்களை பாதுகாக்க வேண்டி மனுதாரர் மனு சொத்தை வேலியிட முயற்சி செய்ததாகவும், அந்த நேரத்தில் எதிர்மனுதாரர் தன்னுடைய ரவுடி ஆட்களுடன் மனு சொத்தினுள் நுழைந்து வேலியிடுவதை தடுத்துவிட்டதாகவும், அங்கு பணியில் இருந்தவர்களை மிரட்டியதாகவும், மனு சொத்தின் ஒரு பகுதி தன்னுடைய சொத்து என்று எதிர்மனுதாரர் கோரியதாகவும், மனுதாரரின் கணவர் உட்பட அக்கம் பக்கத்தாரை கொண்டு எதிர்மனுதாரரின் சட்டத்திற்கு எதிரான நடவடிக்கையை தடுத்துவிட்டதாகவும், எதிர்மனுதாரர் தன்னுடைய சட்டத்திற்கு எதிரான செயலில் வெற்றி அடைந்தால் மனுதாரருக்கு மிகுந்த சிறமம் ஏற்படும் என்றும், மனுதாரர் ஒரு பெண் என்பதால் எதிர்மனுதாரரை நீதிமன்ற உத்தரவின்றி தடுக்கமுடியாது என்றும், வேறுவழியின்றி இந்த அசல் வழக்கினை தொடர்ந்து எதிர்மனுதாரரின் ஆக்கிரமிப்பு முயற்சியை தடுக்க வேண்டி இடைபரிகாரமாக இந்த மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் அவரை தோன்றாத்தரப்பினராக உத்திரவிடப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களும் மற்றும்

நீ.ம.சா.ஆ.1 வரிசை ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

4) **<u>பிரச்சனை:–</u>** மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய விசயம் ஆகும்.

5) **<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

5.1.) அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க இம்மனுவின் மனுதாரரை வாதி என்றும், எதிர்மனுதாரரை பிரதிவாதி என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிக்கு எதிராக வாதி தொடர்ந்துள்ளார்.

5.2.) மனு மற்றும் எதிருரையை கவனமாக பரிசீலித்து கருத்தில் எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலையில் கட்டளை 39 விதி 1, 2 வகைமுறையை இவ்விடத்தில் குறித்துரைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

**<u>கட்டளை 39 விதி 1, 2</u>**

1. Cases in which temporary injunction may be granted

Where in any suit it is proved by affidavit or otherwise-

(a) that any property in dispute in a suit is in danger of being wasted, damaged or alienated by any party to the suit, or wrongfully sold in execution of a decree, or

(b) that the defendant threatens, or intends, to remove or dispose of his property with a view to defrauding his creditors,

(c) that the defendant threatens to dispossess, the plaintiff or otherwise cause injury to the

plaintiff in relation to any property in dispute in the suit,

the Court may be Order grant a temporary injunction to restrain such act, or make such other Order for the purpose of staying and preventing the wasting, damaging, alienation, sale, removal or disposition of the property or dispossession of the plaintiff, or otherwise causing injury to the plaintiff in relation to any property in dispute in the suit] as the Court thinks fit, until the disposal of the suit or until further Orders.

2. Injunction to restrain repetition or continuance of breach;

(1) In any suit for restraining the defendant from committing a breach of contract or other injury of any kind, whether compensation is claimed in the suit or not, the plaintiff may, at any time after the commencement of the suit, and either before or after judgment, apply to the Court for a temporary injunction to restrain the defendant from committing the breach of contract or injury complained, of, or any breach of contract or injury of a like kind arising out of the same contract or relating to the same property or right.

(2) The Court may be Order grant such injunction, on such terms as to the duration of the injunction, keeping an account, giving security, or otherwise, as the Court thinks fit.

5.3) **மாண்புமிகு உச்ச நீதிமன்றம்** In Dalpat Kumar v. Prahlad Singh (1992) 1 SCC 719 , a Bench of two Judges of Hon'ble Apex Court held that the phrases "prima facie case", "balance of convenience" and "irreparable loss" are not rhetoric phrases for incantation but words of width and elasticity, intended to meet myriad situations presented by men's ingenuity in given facts and circumstances and should always be hedged with sound exercise of judicial discretion to meet the ends of justice. The court would be circumspect before granting the injunction and look to the conduct of the party, the probable injury to either party and whether the plaintiff could be adequately compensated if injunction is refused. The existence of prima fade right and infraction of the enjoyment of him property or the right is a condition for the grant of temporary injunction. Prima facie case is not to be confused with prima facie title

which has to be established on evidence at the trial. Only prima facie case is a substantial question raised, bona fide, which needs investigation and a decision on merits. Satisfaction that there is a prima facie case by itself is not sufficient to grant injunction. The court further has to satisfy that non-interference by the court would result in "irreparable injury" to the party seeking relief and that there is no other remedy available to the party except one to grant injunction and he needs protection from the consequences of apprehended injury or dispossession. Irreparable injury, however, does not mean that there must be no physical possibility of repairing the injury but means only that the Injury must be a material one, namely one that cannot be adequately compensated by way of damages. The balance of convenience must be in favour of granting injunction. The court while granting or refusing to grant injunction should exercise sound judicial discretion to find the amount of substantial mischief or injury which is likely to be caused to the parties if the injunction is refused and compare it with that which is likely to be caused to the other side if the injunction is granted. If on weighing competing possibilities or probabilities of likelihood of injury and if the court considers that pending the suit, the subject matter should be maintained in status quo, an injunction would be issued. The court has to exercise its sound judicial discretion in granting or refusing the relief of ad interim injunction pending the suit." **– என்று கருத்து செறிவுமிக்க முன் தீர்ப்பு வழங்கியுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.**

5.4.) **மேற்கண்ட சட்ட வகைமுறைப்படியும் மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பின்படியும், வாதிக்கு ஆதரவாக 1.முதல் தோற்ற வழக்கு 2.வாய்ப்புகளின் சமநிலைமை 3.ஈடுசெய்யமுடியாத இழப்பு ஆகியவை இருந்தால் தற்காலிக**

உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற தகுதியுடையவர் ஆவார். வாதிக்கு முன்பாக மனு சொத்து ராமசாமிகவுண்டருக்கு ம.சா.ஆ.1 பாகசாசனத்தின்படி பாத்தியப்பட்டுள்ளது. ராமசாமிகவுண்டரின் வாரிசுகள் மனு சொத்தை வாதிக்கு ம.சா.ஆ–2 ஆவணத்தின்படி கிரையம் கொடுத்துள்ளார்கள். ம.சா.ஆ.2 ஆவண தேதியிலிருந்து வாதி மனு சொத்தின் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருகிறார். வருவாய் ஆவணங்கள் வாதி பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது. வாதி பெயரில் உள்ள கணினி பட்டா மா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிக்கு அவரது சொத்து தானசெட்டில்மெண்ட் ஆவணப்படி பாத்தியப்பட்டுள்ளது. அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் வாதி தரப்பிலேயே ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனு சொத்துக்களுக்கு உரிய வில்லங்க சான்றிதழ் கணினி நகல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி நீதிமன்ற ஆணையாளரை அழைத்து சென்று மனு சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் முன்னிலையில் நில அளவையரை கொண்டு அளந்து இந்நீதிமன்றத்திற்கு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. பிரதிவாதியின் சொத்தையும் நீதிமன்ற ஆணையாளர் அளந்து அறிக்கை கொடுத்துள்ளார். நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 வரிசைகளாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.5.) பிரதிவாதி நீதிமன்றத்தில் தோன்றி இந்த மனுவிற்கு எதிருரை தாக்கல் செய்யவில்லை. எனவே பிரதிவாதியை தோன்றாத்தரப்பினராக இந்நீதிமன்றம்

உத்தரவிட்டுள்ளது. பிரதிவாதி கடந்த 28.12.2022 தேதியில் வாதியின் மனு சொத்தின் மீதான அமைதியான சுவாதீனத்தை இடையூறு செய்துள்ளார். ம.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்களிலிருந்தும், நீ.ம.சா.ஆ.1 வரிசை ஆவணங்களிலிருந்தும் வாதி மனு சொத்திற்கு உரிமையாளர் என்பதை அறியமுடிகிறது. வாதி மனு சொத்தின் உரிமையாளர் என்பதால் வாதிக்கு ஆதரவாக முதல் தோற்ற வழக்கு எழுகிறது. வாதி மனு சொத்தில் அமைதியான முறையில் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருகிறார். வாதியின் சுவாதீனத்தை பிரதிவாதி இடையூறு செய்தால் வாதிக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு ஏற்படும். அதன் மூலமாக வாய்ப்புகளின் சமநிலைமை வாதிக்கு ஆதரவாகவே அமைந்துள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 04.12.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2023.12.04 09:47:16 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**பிற்சேர்க்கை :–**

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 23.04.1973 | பாகசாசன ஆவண எண்.568/1973–ன் கணினி சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 12.10.2022 | கிரைய ஆவண எண்.16980/2022–ன் கணினி சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 03.01.2023 | நில உரிமை விபரங்கள் கணினி நகல் – பட்டா எண்.4501 |
| ம.சா.ஆ.4 | 29.12.2022 | வில்லங்க சான்று கணிணி நகல் (01.01.2010 முதல் 28.12.2022 வரை) |
| ம.சா.ஆ.5 | 25.07.2022 | தானசெட்டில்மெண்ட் பத்திர எண்.12573/2022–ன் கணினி சான்றிட்ட நகல் |
| நீ.ம.சா.ஆ.1 வரிசை | | நீதிமன்ற ஆணையரின் அறிக்கை |

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:–**

இல்லை

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2023.12.04 09:47:23 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.ம.எண்.92/2023
இன்
அ.வ.எண்.3/2023
சீரான/வரைவு உத்தரவு
நாள்.04.12.2023
மா.உ.நீ., அவிநாசி